REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 5உ செவ்வாய் (20—12—55) ★ ★ வெளியீடு : மார்கழி 6உ புதன் (21—12—55) [இதழ் 161

திரு-தமிழக மக்கள் அவதி— மத்திய மந்திரியிடம் முறையீடு

மூணர், டிச 19—

திரு-தமிழகக் காங்கிரசின் தேவிகுளம், பீர்மேடு தூதுக் குழு, மத்திய மந்திரி பண்டித பந்தைச் சந்தித்து, தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் தமிழகத்துடன் இணைய வேண்டும் என்று கோரியதுடன், அங்குள்ள தமிழர்கள் இப்போது அங்கு நிலவும் ஆட்சியின்கீழ் படும் அவதி குறித்தும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். தமிழகத்துடன் அந்த இரு வட்டங்களும் சேர்ந்தாகவேண்டும் என்பதற்கான ஆதாரங்கள், புள்ளிவிவரங்கள் பலவற்றையும் கொண்ட மனு ஒன்றையும் மந்திரியிடம் சமர்ப்பித்திருக்கின்றனர்.

தலைமைக் கழகம் : அறிக்கை 34/55

புனலால்-புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டுவந்த பொதுச்செயலாளர் அறிக்கை

கடும்புயலாலும், பெருமழையாலும், கட்டுக்கடங்கா வெள்ளத்தாலும் தாக்கப்பட்டுப் பேரிழப்புக்கும், பெரு அழிவிற்கும் ஆளானத் தமிழகப் பகுதிகளை, நேரிற் சென்று பார்வையிடும் பணியினை இவ் டிசம்பர் திங்கள் மூன்றுவது வாரத்தில் மேற்கொண்டேன். எளிதாகவும், விரைவாகவும் பல இடங்களையும் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும்வகையில் தோழர் கண்ணதாசன் அவர்கள் தம்முடைய காரைக் கொடுத்து உதவினார்கள்.

என்னுடைய சுற்றுப்பயணம் முழுவதிலும் தஞ்சை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும், மதுரை மாவட்டப் பகுதிகளைச் சுற்றிப் பார்க்கும்போது மதுரை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களும் உடனிருந்து பாதிக்கப்பட்ட இடங்களையும்—மக்களையும் நான் சென்று பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளை நல்லமுறையில் செய்து வைத்திருந்தனர். பாதிக்கப்பட்ட இடங்களைப் படம் பிடிப்பதற்குத் 'தென்றல் திரை' போட்டோகிராப்பர் தோழர் சாமுவேல் அவர்கள் உடன் வந்தார்கள்.

நான் திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், தோப்புத்துறை, மன்னார்குடி, மதுக்கூர், அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, காரைக்குடி, தேவக்கோட்டை, திருப்பத்தூர், மேலூர், அதனைச் சுற்றியுள்ள சிற்றூர்கள் ஆகிய இடங்களையும், இவ்வூர்களுக்கு இடையிடையே வழிநெடுக உள்ள சிற்றூர்களையும் பார்வையிட்டேன். குறுகிய காலத்திற்குள் காரில் செல்லுவதற்கான முறையில் வழியமைப்புகள் சரியாக இல்லாமல் ஆங்காங்கு உடைப்புகள் ஏற்பட்டிருந்தபடியால் பிறபகுதிகளைச் சென்று பார்வையிடுவதற்கு இப்பொழுது இயலாமற் போயிற்று. சேதங்களின் அளவையும் விபரத்தையும் செய்தித் தாள்களில் யாவரும் கண்டிருக்கலாம். அவற்றை மீண்டும் இங்குக் குறிப்பிடவேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தோழர்கள் பலரும் மிகத் தீவிரமாகவும், திறமையாகவும் நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டும்—கேட்டும் பூரிப்பும் பெருமையும் கொண்டேன். வெள்ளத்திலும், புயலிலும், இடிபாடுகளிலும் சிக்கித் தவித்த மக்களைத் தங்களால் இயன்ற அளவுக்கு மீட்கும் பணியில் உடனடியாக ஈடுபட்டார்கள் என்பதைக் கேள்வியுற்றேன். சிற்சில இடங்களில் தன்னந் தனியாக நின்றும், பற்பல இடங்களில் பிற அரசியல் கட்சிக்காரர்களோடும், பிற அமைப்பினரோடும் இணைந்து நின்றும் கழகத் தோழர்கள் பணியாற்றி வருகிறார்கள். ஆங்காங்குக் கழகத் தோழர்களைக் கூட்டிவைத்து நிலைமைகளைக் கேட்டறிந்தேன். நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டிய முறைகள் பற்றியும், உணவு - உடை - உறையுளுக்கு வேண்டிய பொருள்கள் ஆகியவற்றைத் திரட்டுதல், அவதியுறுவோரின் புள்ளி விவரம் சேகரித்தல், அவர்களுக்கு முறைப்படி பொருள்களைப் பகிர்ந்து கொடுத்தல், அவதியுறுவோரின் தேவைகளை அரசாங்க அதிகாரிகளிடம் முறையிடுதல், அரசாங்க அதிகாரிகளின் பங்கீடு முறை செவ்வனே நடைபெறுகிறதா என்று கண்காணித்து வருதல், அவதியுறுவோருக்கு உறுதுணையாக இருந்து அவர்களுக்குத் தேவையானவைகளை அரசாங்க அதிகாரிகளிடமிருந்து வாங்கிக் கொடுத்தல் போன்ற பணிகளில் ஈடுபட வேண்டிய கடப்பாடுகள் பற்றியும் கழகத் தோழர்களுக்கு அறிவுரை கூறினேன். அவர்களும் ஆங்காங்கு ஊக்கத்தோடு பாடுபடுவதாக வாக்களித்தார்கள்.

சில இடங்களில் புயல் நிவாரணத்திற்கு என்று அமைக்கப்பட்டிருந்த பொது நிவாரணக் குழுவினரைக் கண்டு உரையாடினேன். இயன்ற அளவுக்கு அத்தகையோர், அரும்பணி ஆற்றி வருவதைக் கண்டேன். அத்தகைய குழுவிற்குத் தி. மு. கழகத்தவரின் முழு ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற உறுதிப்பாட்டைத் தெரிவித்து வந்தேன்.

முழுக்க முழுக்கப் போற்றுவதற்குரியவர்கள் என்று கூற முடியாவிட்டாலும், அரசாங்க அதிகாரிகள் சிறிதளவு நிவாரண நடவடிக்கைகளில் அக்கரை காட்ட முனைந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். பொதுமக்கள் தமிழகமெங்கணும் இருந்து திரட்டி அனுப்பிவைக்கும் பணம்—உணவு—உடை—பொருள்கள் ஆகியவை பாதிக்கப்பட்ட ஏழை எளிய பாட்டாளி மக்களுக்குச் சரியானபடி கிடைக்குமா அல்லது இடையிலேயுள்ள அதிகாரிகளால் மறைக்கப்பட்டுப் பறிக்கப்பட்டு விடுமோ என்ற ஐயப்பாடு பல இடங்களிலும் நிலவி வருகிறது. இந்த ஐயப்பாட்டை நல்ல முறையில் நீக்கும் வகையில் அரசாங்க அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

சென்ற புயல் நிவாரணமாகத் தி. மு கழகம் அளித்த கைத்தறித் துணி மூட்டைகளில் ஒன்று இரண்டு பட்டுக்கோட்டை தாலுக்கா ஆபீசில் இன்னமும் அப்படியே கிடக்கின்றன என்று கேள்விப்பட்டேன். அதுபற்றிய முழு விபரமும் கண்டறிந்து எழுதும்படி கழகத் தோழர்களிடம் கூறிவிட்டு வந்துள்ளேன். இன்னும் எத்தனைத் தாலுக்கா ஆபீசுகளில் எத்தனை மூட்டைகள் இப்படிக் கிடக்கின்றனவோ என்று நாம் ஐயுறவேண்டியிருக்கிறது. இத்தகைய சீர்கேடுகள் தொடர்ந்து நடைபெறவண்ணம் அரசாங்கமும், பொதுநல அமைப்புகளும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சேதங்களின் அளவைக் காணும்போது அதிக அளவு உதவி ரூ. 3½-தான் என்று அரசாங்கம் முடிவு செய்திருப்பது அவ்வளவு பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. உடைமைகள் எல்லாவற்றையும் இழந்து தவிக்கும் உழவர்கள்—பாட்டாளிகள்—நெசவாளர்கள்—தாழ்த்தப்பட்டவர்கள் போன்றோர் தம் வாழ்வை மீண்டும் துவக்குவதற்கு ஏற்ற வகையில் சற்றுமிகுந்த பொருளுதவி அளிக்க அரசாங்கம் முனையவேண்டும்.

வேதாரண்யம், தோப்புத்துறை, திருவாடானை, இராஜசிங்கமங்கலம் போன்ற பகுதிகளிலும், ஆங்காங்குள்ள சேரிகளிலும் வீடிழந்து, வாழ இடமற்றுத் தவிக்கும் மக்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் 'மிலிட்டரி டெண்ட்'களைக் கொடுத்துதவ அரசாங்கம் முன்வரவேண்டும். நிவாரண வேலைகளைச் சரிவர செய்யத் தெரியாத இராணுவ வீரர்களுக்கும், ரிசர்வ் போலீஸ்காரர்களுக்கும் 'படி'கள் கொடுத்துப் பாழாக்குவதைவிட, அந்தப் 'படி'களைப் புயலால் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்குக் கொடுத்து அவர்களைக் கொண்டு வேலை வாங்கிக் கொள்ள முயலுவது நலம் பயப்பதாகும்; அதனால் வேலையும் சரியாக நடக்கும்; பாதிக்கப்பட்டோர்க்கு நிவாரணமும் கிடைக்கும்.

ஆங்காங்குத் தி. மு. கழகத் தோழர்கள் துணிகள்—உணவுப் பொருள்கள் ஆகியவற்றைத் திரட்டி, 'தோழர் என். எஸ். இளங்கோ, C/O தி. மு. கழகம், வேதாரண்யம்' என்ற முகவரிக்கும், 'தோழர் எஸ். முத்து, 4, கட்ரூப்பாளையம் ரோடு, மதுரை' என்ற முகவரிக்கும் அனுப்பிவைத்தால், அவர்கள், பாதிக்கப்பட்டோரிடம் நேரிடையாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைக்கக் கழகத் தோழர்கள் அனைவரும் ஆங்காங்குத் தொடர்ந்து பணிபுரிவோமாக! கடமையைச் செய்வோமாக! களிப்படைவோமாக!

"அறிவகம்"
சென்னை - 13
20—12—55

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

'அம்பர் சர்க்கா' தகராறு

சமரசத்திற்கு ஏற்பாடு

புதுடில்லி, டிச. 19—

'அம்பர் சர்க்கா'வை ஒட்டி எழுந்துள்ள தகராறைத் தீர்த்து வைக்க ஒரு சமரச ஏற்பாடு முயற்சிக்கப்படுகிறதாம்.

அதாவது 40-ம், அதற்கும் மேலானதுமான கெம்பர் நூல் உற்பத்திக்கு மட்டும் கதிர்கள் அதிகரிக்க ஆலைகளுக்கு அனுமதி வழங்குவது என்றும், 40-க்குக் கீழ்தர நூல் உற்பத்தியை 'அம்பர் சர்க்கா'விடம் ஒப்புவிப்பது என்றும் ஏற்பாடு தயாராகிறதாம்

இப்படிச் செய்தால்கூட, கைத்தறிகளில் பெரும்பாலானவை, 40-க்கும் குறைவான 'கெம்பர்' நூலையே உபயோகிப்பவை என்பதால், 'அம்பர் சர்க்கா' இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாது என்றும் கூறப்படுகிறது.

என்றாலும், இப்படி ஒரு ஏற்பாடு செய்யவேண்டியது, 'அம்பர் சர்க்கா'விற்கு ஒரு வாய்ப்புத் தந்து பரிசோதித்துப் பார்க்கலாம் என்பதற்காகவே என்று கூறப்படுகிறது.

எல்லைத் தகராறுகள்

'பேசித் தீர்த்துக்கொள்ள இன்னும் வாய்ப்புள்ளது'

ஆந்திர மந்திரி கருத்து

கர்னூல், டிச. 19—

"ஆந்திரா—சென்னை மாநிலங்களுக்கிடையேயுள்ள எல்லைத் தகராறுகளை எல்லைக் குழு இல்லாமலேயே இரு சாராரும் பேசி தீர்த்துக்கொள்வதற்கு இன்னும் வாய்ப்பு இருப்பதாகவே நம்புகிறேன்; சென்னையோ அல்லது ஆந்திரமோ 'வக்கிரபுத்தி' கொண்டதல்ல;

"அப்படி அவசியமானல், பெரும் சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் காங்கிரஸ் உயர்தரக் குழு போல சிறு சிறு எல்லைத் தகராறுகளைத் தீர்த்துவைக்கவும் ஒரு எல்லைக் குழு அமைக்க வேண்டும்,"

என்று டில்லியிலிருந்து திரும்பிய ஆந்திர உதவி முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

'தொழிலாளருக்கு வயிறு மட்டும் உண்டென்பதல்ல; இதயம் ஒன்றும் இருக்கிறது'

இரயில்வேத் தொழிலாளரிடை மு. கருணாநிதி

"இந்த இரயில்வேத் தொழிலாளர் சங்கத்தின் மீது தி. மு. கழகம் வலை வீசவில்லை; மாறாக, இரயில்வேத் தொழிலாளர்கள்தான் தி. மு. கழகத்தின்மீது வலை வீசிப் பிடித்திருக்கிறார்கள் என்பதை எனக்குமுன் பேசிய தொழிலாள நண்பர்கள் குறிப்பிட்டார்கள்.

"தி. மு. கழகம் இரயில்வேத் தொழிலாளர்களுடன் தொடர்புகொள்ளுவது புதியதொரு சம்பவம் அல்ல; திராவிடர் இயக்கத்தின் துவக்கக் காலத்திலிருந்தே இரயில்வேத் தொழிலாளர்களுடன் அவர்கள் தொடர்பு கொண்டிருந்தனர்.

"இரயில்வேத் தொழிலாளர்களுக்கென்று முதன் முதலாக ஒரு தொழிலாளர் சங்கம் அமைந்தது, 1918-ம் ஆண்டில்தான் என்று நினைக்கிறேன்; அந்தச் சங்கம் நாகையில் துவங்கப்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது?

ஜோர்டானில் நடைபெற்ற கலவரத்தின் எதிரொலி!

பாக்தாத் இராணுவ ஒப்பந்தத்தில் ஜோர்டானை இணைப்பதற்குப் புதிய சர்க்கார் மேற்கொண்டுள்ள முயற்சிகளை எதிர்த்து மீண்டும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் 7 பேர் உயிரிழந்ததாயும், 50 பேர் காயமுற்றதாயும் கூறப்பட்டுள்ளது.

பார்லிமெண்டை மன்னர் கலைத்துவிட்டதாகவும், புதிய தேர்தல் நடைபெறுவதற்கு உத்திரவிட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 20—12—'55 செவ்வாய்

மணியோசை கேட்கிறது

இந்திய அரசியல் சட்டத்தில், இந்தியாவின் தேசிய மொழிகளென பதினான்கு மொழிகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தபோதிலும்கூட, மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியான இந்தி மொழிக்குள்ள செல்வாக்கு, ஆதிக்க நிலையைப் பெற்றதாக இருக்கிறது. மற்ற பதின்மூன்று மொழிகள் சட்டப்படி தேசிய மொழிகள் என ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் கூட, அவைகளுக்குரிய அளவு செல்வாக்குக்கூட அவைகளுக்கு அளிக்கப்படவில்லை. அவைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் உரிமைகளை நிறைவேற்றிக் கொள்வதைக் கூட, அகில இந்திய மொழி என்ற முறையில் இந்தி மொழி தடுத்து நிறுத்துகிறது. இந்தி மொழியின் இந்த அளவுகடத்தல், எதிர்காலத்தில் சட்டப்படி உறுதி செய்யப்பட்டுவிடும் என நாம் உறுதியாக நம்புகிறோம். அத்தகு நம்பிக்கைக் கொள்வதற்கான வகையில் இந்தி வெறியர்களுடையவும், இந்தியப் பேரரசின் பிறவிக் குணம் தெரிந்தவர்களுடையவும் பேச்சு இருந்துவருகிறது.

சில நாட்களுக்குமுன் சென்னையில் பேசிய சர்தார் பணிக்கர், இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் இயங்கும் பல்கலைக் கழகங்கள் அனைத்திலும், இந்தி மொழியே போதனா மொழியாக இருந்தாக வேண்டும் என்றும், அப்பொழுதுதான் இந்திய ஐக்கியத்திற்கு இடையூறு எதும் ஏற்படாது பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டார். இந்தி மொழியினர் நீங்கலாக மற்ற மொழியினர்களின் ஆதரவைத் தனது கருத்துக்குச் சாதகமாகப் பெற, இன்றைய நிலையில் பேசப்பட்டுவரும் இந்தி சொற்களை, உத்திரப் பிரதேசத்தவர்களைக் காட்டிலும், மற்ற மொழிப் பிரதேசத்தவர்களே நன்கு அறிவர் எனவும் கட்டுக்கதை கூறி இருக்கிறார்.

அலகாபாத் நகரில், இந்தி மொழிப் பயிற்சிப் பள்ளி பட்டமளிப்பு விழாவில் பேசிய காலை, ஆரியக் கலாச்சாரப் பாதுகாவலரான முன்ஷி, சர்தார் பணிக்கரையும்விட ஒருபடி மேலேபோய், 'இந்தியா முழுவதிலும் உயர்தரக் கல்வி நிலையிலேயே இந்தி மொழியை போதனா மொழியாகப் புகுத்த வேண்டும்; அப்பொழுதுதான் இந்திய ஐக்கியம் மேலும் வலுவுறும் எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

'உயர்தரக் கல்வி நிலையில் போதனா மொழியாக இந்தி புகுத்தப்படாத பட்சத்தில், இந்தியா சின்னாபின்னப்பட்டுவிடும்' என்றும் முன்ஷி, அதே பேச்சில் புலம்பியிருக்கிறார்.

சர்தார் பணிக்கரும், முன்ஷியும் அரசியல் சட்டத்தை சிக்கறத் தெரிந்திருக்கின்ற அளவிற்கு-என்-அதற்கு மேலும் கூடுதலாக, இந்தியப் பேரரசில் ஆதிக்கம் செலுத்துகிறவர்களின் மனப்போக்கைத் தெளிவாகத் தெரிந்திருப்பவர்களாவார்கள். அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பதினான்கு தேசிய மொழிகளையும், அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஒதுக்கப்பட்டுள்ள பணியின் தன்மையையும் அவ்விரு கனவான்களும் அறிந்தே இருக்கிறார்கள். இருந்தாலும் கூறுகிறார்கள்—இந்தியாவின் ஐக்கியம் சிதையாமல் கட்டிக் காக்க, மற்ற பதின்மூன்று தேசிய மொழிகளும் தனித்தனியே வழங்கப்பெறும் பகுதிகளிலும், அம்மொழிகளை மூலையில் ஒதுக்கித் தள்ளிவிட்டு தேசிய மொழிகளில் ஒன்றான இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியான இந்தியைத் திணித்தாக வேண்டும் என வற்புறுத்துகிறார்கள். இப்பணியை பல்கலைக் கழகப் போதனா நிலையில் செய்யவேண்டும் எனப் பணிக்கர் கூற, அதற்கு மாறாக, உயர்தரக் கல்வி நிலையிலேயே இந்தியைத் திணித்தாக வேண்டும் என முன்ஷி மார் தட்டுகிறார். கல்வி கட்டத்தில்தான் இவர்களிடை கருத்து மாற்றம் இருக்கின்றதேயல்லாது, மூலக் கோட்பாட்டில் கருத்து முரண்பாடு ஒரு துளியும் இல்லை.

இந்தி மொழியை எப்படி எப்படி செயல்படுத்துவது என்பதை விசாரித்து அறிந்துகூற, இந்தியப் பேரரசால் ஒரு குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. அக்குழுவிடம் சாட்சியமளித்த இந்தியத் தொழில் வர்த்தக சம்மேளனம், இந்தி மொழி பற்றிய திகைப்பளிக்கும் கருத்து ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதாவது, 'ஒவ்வொரு மாகாண அரசாங்க அலுவல்களும் இந்தி மொழியில் மட்டுமே நடைபெற அனுமதிக்கப்பட வேண்டும்; அவ்வாறு இல்லாமல் மாகாண மொழிகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டால், இந்தி அன்னிய மொழியாகக் கருதப்படும நிலை ஏற்படுவதுடன், இறுதியில் இந்தியின் முழு நோக்கமும் நிறைவேறாது தொலையும்' என குறிப்பிட்டிருக்கிறது.

இந்தி மொழிக்கு இந்தியப் பேரரசின் ஆட்சி மொழி என்ற சிறப்பு ஏற்பட வேண்டுமானால், மற்ற தேசிய மொழிகள், அவை, தத்தமக்குரிய பகுதிகளின் ஆட்சி மொழிகளாக செயல்படுவதிலிருந்துத் தடுக்கப்பட்டாக வேண்டும் என இந்தியத் தொழில்—வர்த்தக சம்மேளனம் உவப்புடன் அறிவிக்கிறது.

பொதுவாக, விரும்பாத மக்களிடம்—அதிலும் குறிப்பாகத் தென்னாட்டு மக்கள் மீது, இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிக்கமாட்டோம் என்று, குடியரசு தலைவரிலிருந்து, அவருடைய அலுவலக 'டபேதார்' வரையில், ஒரே மூச்சாகக் கூவிவருகிறார்கள். சொல்தான் இனிக்க இனிக்க இருக்கிறது; ஆனால், செயலோ!

இந்தியப் பேரரசிற்கும் மாகாண அரசாங்கங்களுக்கும் இடையில் நடைபெறும் விவகாரங்களில் இந்தி மொழியே மேற்கொள்ளப்படவேண்டும் எனக் குடியரசுத்தலைவர் அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்துள்ளார். எப்படி எப்படி இந்தியை செயல்படுத்துவது என்பதைக் கண்டறிந்து கூற நியமித்த குழு, தனது கருத்தை அறிவிப்பதற்குள்ளாகவே, மிகமிகத் தீவிரம் காட்டியிருக்கிறார் குடியரசுத் தலைவர்!

குழுவின் முடிவு தமது கட்டளைக்கு மாறுபட்டதாக இருக்காது என்பது குடியரசுத் தலைவரின் திடநம்பிக்கை போலும்!

நிறைவேற்ற முடிவு கட்டியுள்ள ஒன்றை, குழு ஒன்று நியமித்து, அதன் வாயால் அதைக் கூறவைத்து, மக்களை ஒப்பவைப்பது என்பது இந்தியப் பேரரசு மேற்கொண்டுள்ள நவீன அரசியல் முறை போலும்!

இவ்வளவு போக்கும் எதைக் காட்டுகிறது? நமது தமிழ் மீண்டும் வாழ்வு பெறும் என்பதையா?

ஆபத்து வரவிருக்கிறது; இந்தியப் பேரரசில் அது கருக்கொண்டு, வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. அதை அறிவிக்கும் மணி ஓசைதான் இவை அனைத்தும்

சோஷலிச சமுதாயம் அமைக்கப்படுமா?

நிபுணர்களின் சந்தேகம்?

புதுடில்லி, டிச. 19—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சர்க்கார் துறையில் ரூ. 4,800 கோடி முதலீடு செய்வது பற்றி மூன்று நாட்களாக நடைபெற்ற திட்டக் கமிஷனின் பொருளாதார நிபுணர் குழுவில் மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டனவாம்.

சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்குத் தைரியமான நடவடிக்கை எடுக்கப்பட்டால்-போதிய அளவில் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை ஏற்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால், சர்க்கார் துறைக்கு ரூ. 4,800 கோடி ஒதுக்குவதற்கு நிபுணர்கள் இசைவு தந்தனராம்.

இரண்டாவது திட்டக் காலத்தில் பணப் பெருக்கமோ அல்லது பண்டங்களின் விலை உயர்வோ ஏற்படக்கூடாது என்றும், அன்றாட உபயோகத்திற்கான பண்டங்களின் விநியோகத்திற்கு உத்தரவாதமளிக்க வகை செய்ய வேண்டுமென்றும் நிபுணர்கள் பொதுவாக ஒப்புக் கொண்டனராம்.

கொள்ளையன் தந்த காணிக்கை!

சுற்றுப் பயணம் சென்றவருக்கு நேரிட்ட அனுபவம்

ஒரேய், (உ. பி.) டிச 15—

புனாவைச் சேர்ந்த விஸ்வநாத கேசவ ஜோஷி என்பவர் 1950-ல் உலக சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டார். குருக்களுக்குக் காணிக்கை தரும் பழக்கம்பற்றி அவருக்குத் தெரியும் ஆனால், ஒருநாள் தாமே ஒரு கொள்ளைக்காரனிடமிருந்து காணிக்கைப் பெற நேரிடும் என்பதை அவர் கனவிலும் நினைத்ததில்லையாம்.

உலக சுற்றுப்பயணத்தில் ஈடுபடுவதற்கென்றே அவர் ஆசிரியர் தொழிலைக் கைவிட்டார்; கொள்ளைக்காரன் மான்சிங்கைப் பற்றி அவர் கேள்விப்பட்டதுகூட கிடையாதாம்.

சுற்றுப்பயணத்தின்போது, அவர், மான்சிங் கோஷ்டியினரால் சிறைபிடிக்கப்பட்டாராம்; ஆனால். மான்சிங் அவர்மீது இரக்கப்பட்டு விடுதலை செய்தானாம்; உலக சுற்றுப் பயணம் செய்பவர்கள்மீது

(4-ம் பக்கம் பார்க்க)

பக்தூனிஸ்தான் அமைக்க ஐ. நா.-வில் குரல் எழும்பும்

கோரிக்கைக்கு ரஷ்யத்தலைவர்கள் தந்த ஆதரவு

காபூல், டிச. 18—

பாகிஸ்தான்—ஆப்கனிஸ்தான் நாடுகளிடையே குழப்பமான சூழ்நிலை நிலவுவது குறித்து அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர் கவலை தெரிவித்திருக்கிறாராம்.

தனது கவலையை ஆப்கன் சர்க்காருக்குக் குறிப்பொன்று மூலம் அனுப்பிவைத்திருக்கிறாராம்.

ஆப்கன் வெளி விவகாரத்துறை அமைச்சர் சர்தார் நயீம்கான், ரஷ்யத் தலைவர்கள் ஆப்கனை விட்டுப் புறப்படும் நேரத்தில் இந்தத் தகவலை பத்திரிகையாளரிடத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ரஷ்யப் பிரதமர் புல்கானின், பக்தூனிஸ்தான் குறித்து அறிவித்துள்ள கருத்துக்கள், ஆப்கன் கொள்கையை ஒட்டியவையே என்றும் அந்த அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

'பாகிஸ்தான் எல்லையில் வாழுகின்ற பல இலட்சம் பக்தூனகளுக்கு ஒரு தனி நாடு வேண்டும்' என்று ஆப்கன் கோருகிறது.

'பக்தூனிஸ்தான் அமைய வேண்டும் என்ற ஆப்கனின் கோரிக்கை நியாயமானதே' என்றும், 'இது குறித்து பக்தூன் மக்கள் கருத்து அறியப்படவேண்டுவது அவசியம்' என்றும், ரஷ்யப் பிரதமர் புல்கானின், ஆப்கன் பிரதமர் அளித்த விருந்தொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆப்கன் நாட்டிற்கு சோவியத் சர்க்கார், பெரும் பொருளாதார உதவி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாயும் ஆப்கன் மந்திரி கூறியிருக்கிறார்.

"ஆயுத உதவி பெறுவது குறித்து பேச்சுவார்த்தை நடைபெறுகிறதா?" என்று கேட்கப்பட்டபோது, பதிலளிக்க அவர் மறுத்துவிட்டார்.

'சோவியத் ரஷ்யாவிடமிருந்து அதிக உதவி பெறுவதானால், நாங்கள் உதவி செய்வதை நிறுத்திவிடுவோம் என்று அமெரிக்கா அச்சுறுத்தவில்லை' என்றும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அந்த வெளி விவகார இலாகா அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

"பாகிஸ்தான், ஆப்கனின் பொருளாதார வாழ்வை, தனது முட்டுக்கட்டை மூலம் தகர்த்துவிட முயற்சித்தது; ஆனால், இன்று நமது பொருளாதார வரம்பு எப்போதும் போல சீர்குலைவு சிறிதும் இன்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது — நமது சோதர நாடான ரஷ்யாவின் வழியாகப் போக்கு - வரத்து கிடைப்பதால்,"

என்றும் அவர் குறிப்பிட்டார்.

'பக்தூனிஸ்தான் அமைப்பு குறித்து, பாகிஸ்தானுடன் பேச்சுக்கள் நடத்தி சிக்கலுக்குப் பரிகாரம் தேட நாங்கள் தயாராகவே இருக்கிறோம்,' என்றும் அவர் கருத்தறிவித்தார்.

இந்தப் பக்தூனிஸ்தான் சிக்கல் ஐ. நா. சபைக்கு எடுத்துச் செல்லப்படும் எனறு தெரியவருகிறது. இந்தத் தகவலை உறுதி செய்ய மந்திரி சர்தார் நயீம்கான் மறுத்துவிட்டிருக்கிறார்.

சோவியத் தலைவர்களின் ஆப்கன் வருகையினால், ஆப்கன் கடைப்பிடித்துவருகிற நடுநிலைக் கொள்கையில் மாற்றம் எதுவும் இராதெனவும், தொடர்ந்து நடுநிலையிலிருந்து பிறழாமல் ஆப்கன் நடந்துகொள்ளும் என்றும் அவர் கூறினார்.

குழந்தைகள் கல்விப் பிரச்சினை

முன்னேற்ற அம்சங்கள் பற்றி சி. பி. இராமசாமி

கல்கத்தா, டிச. 15—

"குழந்தைகள் கல்விப் பிரச்சினையில் மற்ற நாடுகளைக் காட்டிலும் சீனா முன்னேற்றம் அடைந்து வருகின்றது;

"விளையாட்டின் மூலமே சீனாவில் கல்வி அளித்துவருவது ஒரு சிறப்பான அம்சமாகும் எல்லாக் கட்டங்களிலும், கட்டணங்களின்றி கல்வி புகட்டப்படுகையில், உடல் உழைப்பு வலியுறுத்தப்பட்டு வருகிறது"

என்று, சர் சி. பி. இராமசாமி தென்னிந்தியர்கள் சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்பது மாத காலத்துக்குள் 11 மாடியுள்ள விடுதியை 24 மணி நேரம் வேலை செய்து 11,000 மாணவர்கள்கட்டி முடித்த விவரத்தையும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க உதவி அதிகரிக்கும்?

ரஷ்யா தரும் உதவியை மிஞ்சுவதற்கு முயற்சி?

வாஷிங்டன்—

வெளிநாடுகளுக்கு உதவுவதற்கான உதவித் தொகையை, 1957-ம் ஆண்டில் அமெரிக்கா இருமடங்காக அதிகரிக்கக் கூடுமாம்!

ரஷ்யா மேற்கொண்டிருக்கும் உதவித் தொகை திட்டத்தை மிஞ்சுவதற்காகவே இந்த ஏற்பாடாம்!

உதவித் தொகையை 270 – கோடி டாலரிலிருந்து 512 கோடி 60 இலட்சம் டாலராக உயர்த்துவதற்கு நிர்வாகிகள் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

ரஷ்யத் தலைவர்கள் ஆசியப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்தபோது பொருளாதார உதவியளிப்பதாக உறுதி கூறியதையடுத்தே வாஷிங்டனிலுள்ள உயர்தர அதிகாரிகள் அவசர அவசரமாக இந்த முடிவுக்கு வந்தார்களாம்!

என்றாலும், அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு இருக்கக் கூடுமெனக் கருதப்படுகிறதாம்.

வார்த்தை திரிந்ததால் வந்த வம்பு!

தமிழ் நாட்டில் ஒரு பழமொழி உண்டு. 'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என்று; அப்படியானால், முழு வைத்தியன் ஆகவேண்டுமானால் இரண்டாயிரம் பேரையாவது கொல்லவேண்டுமென்று அர்த்தம் ஆகிறது அல்லவா? ஆனால், உண்மை அதுவல்ல; பச்சிலை மூலிகை, வேர் முதலியவற்றைக் கொண்டு வைத்தியம் செய்யும் முறை தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்துவருகின்றது. நாட்டு வைத்தியர்களிடம் பலவித இலைகள் இருக்கும். சில மருந்துகளுக்கு வேரை உபயோகிப்பார்கள். ஆகவே, காடு, மலையெல்லாம் சுற்றி பலவித வேர்களைக் கொண்டு வருவார்கள். அப்படிக் கஷ்டப்பட்டு எவனொருவன் ஆயிரம் வேர்களைக் கொண்டவனாக இருக்கின்றானோ, அவன் அரை வைத்தியனாவான்,' என்றார்கள் நாளடைவில் இந்தப் பழமொழி, 'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என்று மாறிவிட்டது 'கொண்டவன்' என்ற சொல் 'கொன்றவன்' ஆகவும், 'வேரை' என்பது 'பேரை' என்றும் திரிந்துவிட்டது.

'விசால ஆந்திரம் உடனே அமைய வேண்டும்'

'தெலிங்கான என்ற கோரிக்கை சுயநலமிகளின் கூச்சல்'

அனந்தசயனம் அய்யங்கார் விளக்கம்

புதுடில்லி, டிச. 17—

"தெலுங்கர்கள் அனைவரும் ஒன்ருக வாழ்வதற்காக, 'விசால ஆந்திர மாநிலம்' அமைய வேண்டுவது அவசியமாகும்.

"எந்தக் கண்கொண்டு பார்த்தாலும், விசால ஆந்திரம் அமைய வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதேயாகும்.

"தெலிங்கான தனியாக இருக்க வேண்டும் என்பது, நிசாம் இருந்த இடத்தில் தாங்கள் இருந்து ஆள வேண்டும் என்று எண்ணுகிற சிலரது சுயநலப் போக்கின் விளைவாகும்.

"நாங்கள் காலி செய்த இடத்தில் ரெட்டிகள் ஆள்வது கூடாது; (ரெட்டிகள்தான் தெலிங்கானவில் பெரும் நிலப் பிரபுக்களாயிருப்பவர்கள்) அதனை நாம் அனுமதிக்கக் கூடாது.

"பிரிவினை சக்திகளை வளர்க்கும் என்பதற்காக மாநிலப் புது அமைப்பை என்றென்றைக்கும் ஒத்திப்போடுவதென்பது கூடாது.

"ஒரு மொழி பேசுபவர்கள் அனைவரும் ஒருசேர வாழ வேண்டுமென்பது எந்தவகையாலும் தவறுடையாகாது.

"எனவே, தெலிங்கான தனியாக இருக்கவேண்டுமென்பது சிலரது சுயநலப் பின்னணி கொண்டது என்பதால், அதற்கு இணங்கலாகாது.

"தனி தெலிங்கான, பாலும் தேனும் வழிந்தோடும் செழிப்பானதாயிருக்கும் என்று கூறுகிருர்கள்; அது ஏற்றுக்கொள்ள முடியாதது.

"தெலிங்கானவின் வருமானமான ஆறு கோடி ரூபாய், ஐந்து கோடி மதுக் குடி வரியிலிருந்து கிடைக்கிறது; இதர ஒரு கோடி, சுமையான நிலவரி மூலம் கிடைக்கிறது. நிலவரி குறைக்கப்பட்டு, மதுவிலக்கு அமுலானல், பின் தெலிங்கானவிற்கு வருமானம் எங்கிருந்து வரும்? எப்படி அது தனி மாநிலமாக இயங்க முடியும்?

"இந்தியாவுடன் ஐதராபாத் இணையக் கூடாது—என்று எதிர்ப்பு காட்டியவர்கள்தான், இன்று, 'தெலிங்கான தனியாக இருக்கவேண்டும்' என்ற கிளர்ச்சிக்குப் பின்னணி பலமாக நின்றுகொண்டிருக்கிருர்கள்; எனவே, தெலிங்கான இந்தியாவில் ஒரு 'அபாயப் பகுதி'யாக மாறிவிடாது பார்த்துக் கொள்ளவேண்டும்,"

—என்று, மக்கள் சபையில், விசால ஆந்திர அமைப்புக் குறித்துப் பேசிய அனந்தசயனம் அய்யங்கார் குறிப்பிட்டிருக்கிருர்.

என்ன கருணை— என்ன இரக்கம்!

என்னே 'இந்திய ஒற்றுமை'யின் பெருமை

சென்னை, டிச. 18—

இந்தியப் பேரரசின் உள்நாட்டுத் துறை அமைச்சரான பண்டித கோவிந்த வல்லப பந்த், தமிழ் நாட்டில் வெள்ளத்தாலும், புயலாலும் இறந்துபட்டவர்களுக்கு அனுதாபச் செய்தி ஒன்றை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் பி. கக்கனுக்கு அனுப்பி வைத்திருக்கிருராம்.

புயலும் வெள்ளமும் நிகழ்ந்து 17 நாட்களாகி விட்டது.

போர்ச்சுகீசியரின் மிருகவெறி

விடுதலை வீரரை அடித்துக் கொன்ற கோரம்

சவந்த்வாடி—

போர்ச்சுகீசியப் போலீசார், கோவா தேசீய இயக்கத் தலைவரான பிரபாகர் வேர்ணிகார் என்பவரை சித்திரவதை செய்து பலி கொண்டுவிட்டனர் என்று தெரியவருகிறது.

இந்தச் செய்தி கேட்டு, அவருடைய தாயார் தற்கொலை செய்து கொண்டாராம்.

போர்ச்சுகீசிய ஆதிபத்தியத்திற்கு எதிராகப் பிரபாகர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக அண்மையில் போலீசாரால் அவர் கைது செய்யப்பட்டாராம்.

போலீஸ் நிலையத்தில் அவர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டாராம்.

நினைவற்ற நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர், உயிர் துறந்ததாகத் தெரியவருகிறது. அவர் தனது பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளையாம்!

★

சுற்றிவளைத்து பேசும் செயலில் இறங்குகிருர்!

கோவாவை 'காலனி' என்று கூறுவது பழிச்சொல்லாகுமாம்!

கோவாவில் போர்ச்சுகீசிய ஆட்சி உரிமை தவிர, இந்தியாவினால் எழுப்பப்படும் வேறு எந்தப் பிரச்சினை குறித்தும் விவாதிக்க தமது நாடு தயார் என போர்ச்சுகல் வெளிவிவகார மந்திரி டாக்டர் பாலோ குன்ஹா கூறியுள்ளார்.

கோவா தாக்கப்பட்டால், போர்ச்சுக்கல் எல்லா வழிகளிலும் அதனைப் பாதுகாக்குமாம்!

'கோவா ஒரு போர்ச்சுகீசிய மாகாணம்; அது ஒரு 'காலனி' என இந்தியா குறிப்பிடுவது பழிச்சொல்லாகும். இணைப்புக் கோரிக்கைக்கு அனுதாபம் தேடவே இந்தியா இவ்வாறு குறிப்பிடுகிறது'. என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவுடன் கோவாவை இணைப்பதற்காகக் காரணமின்றி, பூசோள ரீதியான ஆதாரங்கள் காட்டப்படுகிறதாம்!

"இந்தியாவிலுள்ள பிரெஞ்சுப் பகுதிகளை இணைத்ததைப் போன்றும், காஷ்மீரை இணைக்க விரும்புவதைப் போன்றும் போர்ச்சுகீசியப் பகுதியையும் இணைக்க இந்தியா விரும்புகிறது; மேலும் மேலும் பகுதிகளை இந்தியா எப்போதும் கோருகிறது" என்றும் அவர் குறிப்பிட்டாராம்!

"கோவாவில் பொதுமக்கள் வாக்கெடுப்புக்குப் போர்ச்சுக்கல் இணங்குமா?" என கேட்டதற்கு, 'இவ்வித வாக்கெடுப்பின் முடிவுகள் குறித்து போர்ச்சுகலுக்கு நம்பிக்கை உண்டு; ஆனல், அண்டை நாடு ஏகாதிபத்திய ஆசை கொண்டிருப்பதால் இதற்கு இணங்குவதற்கில்லை' என்ருர் அவர்.

ஆக்கிரமிப்பு, இதர கொடுமைகள் மூலம் இந்தியாவில் போர்ச்சுக்கல் குடியேறியதாக குருஷ்சேவ் கூறுவது முற்றிலும் உண்மையல்லவாம்!

'இந்தியாவின் ஆசைகள்' என அவர் குறிப்பிட்டுச் சொன்னதாவது:—'நான் உங்களது சட்டையை விரும்பினல் அது ஆசையல்ல; ஆனல், அது திருட்டாகும்; போலீசுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயமாகும்.'

'இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்ற மாணவர்கள் முன்வர வேண்டுமாம்'

வடநாட்டுப் பல்கலைக் கழகத்தில் தென்னட்டு ஆச்சாரியார் உபதேசம்

காசி, டிச. 18—

"நீங்கள் எதிர்காலத்தில் எந்த ஒரு வாழ்க்கை நிலையை மேற்கொண்டாலும், மதம், மொழி, வகுப்பு, சாதி இவற்றின் பெயரால் துவக்கப்படுகிற பிரிவினை இயக்கங்களுக்கு எதிராக இடைவிடாது போரிடுபவர்களாக இருக்க வேண்டும்,"

என்று, திட்டக் குழுத் துணைத் தலைவரான வி. டி. கிருஷ்ணமாச்சாரி, காசி இந்து பல்கலைக் கழகத்தின் 38-வது பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"அத்தகு இயக்கங்கள், நூற்றாண்டுக்காலமாக நமது வாழ்வில் ஊடுருவி நிற்கிற இலட்சியங்களில் மதிப்பின்மைக்கும் நமது 'ஆத்மார்த்தச் செல்வங்களுக்கு' அழிவு ஏற்பட்டிருப்பதற்கும் எடுத்துக் காட்டுகளாகும். தேசீய நலன்களுக்கு ஊறு தேடுவதில் இவற்றை விட வேறு சிறந்தவை எதுவும் இல்லை. 'ஒற்றுமை'க்காகப் போராடுவதில் படித்த ஆண்களும், பெண்களும்தான் முன்னணியில் நிற்க வேண்டும். அதிருஷ்டவசமாக மக்களின் இதயம் உறுதியாயிருக்கிறது. எனவே, படித்த ஆண்களுக்கும்—பெண்களுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது. அவர்கள்தான் சரியான தலைமையை மேற்கொண்டு, எத்தகு தியாகங்கள் புரியவேண்டியிருப்பினும், இந்தியாவின் 'ஒற்றுமை' எந்தக் காலத்திலும், குலைக்கப்படாது நிலைநிறுத்தப்படுவதற்குப் பாடுபட வேண்டும்."

வழுக்கி விழுந்த பெண்களுக்கு வாழ்வளிக்க!

திட்டங்கள் குறித்து துர்காபாய் தேஷ்முக்

சென்னை, டிச. 18—

"'சேவா சமாஜம்' போன்ற சமூக நல இயக்கங்கள், இரண்டாம் திட்டத்தின் இலட்சிய எல்லைகளை அடைவதற்குப் பெரிதும் துணையாயிருக்க முடியும். சமூக நல வேலைகளை ஒன்று சேர்ந்து கூட்டாகக் கவனிப்பதுதான் மத்திய சமூக நலக் கழகத்தின் நோக்கமாகும்.

"சமூக நல வேலைகளுக்காக ரூ 15 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதுடன், வழுக்கி விழுந்த பெண்களுக்கு மறுவாழ்வு தருவதற்கான சிபாரிசுகள் சிலவற்றை அமுல் செய்வதற்கும் என்று மேலும் ரூ. 105 கோடி கிடைக்க வாய்ப்பிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்,"

என்று, மத்திய சமூக நலக் கழகத்தின் தலைவியான திருமதி துர்காபாய்-தேஷ்முக் சென்னையில் நடைபெற்ற சேவா சமாஜத்தின் ஆண்டு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மானிட உடல்: ஒரு நவீன இயந்திரம்!

மனித உடலே ஒரு நவீன இயந்திரம்தான். 70 வருடத்தில் இதயம் 2,57,54,40,000 தடவை துடிக்கின்றது. ஒரு மணி நேரத்திற்கு 16 காலன் இரத்தம் வீதம் 70 ஆண்டில் 10,22,00,000 காலன் இரத்தம் பீச்சுகிறதாம். ஒரு வினடி கூட நிறுத்தாமல் 70 வருடங்களில் 8,67,92,000 நிமிடங்கள் இதயம் வேலை செய்கிறது

அமெரிக்க நாட்டில் 'பலோமா மலை'யில், பெரிய வானிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே 200 அங்குலம் குறுக்களவுள்ள தூரதிருஷ்டிக் கண்ணடி ஒன்று உள்ளது. அதன் மூலம் 1,800-மைலுக்கு அப்பாலுள்ள மெழுகுவர்த்தியின் சுடரைக் காணலாம்.

இலங்கை ஜனநாயகக் காங்கிரசில் பிளவு

அஜீஸ் கோஷ்டிக்குச் சீட்டு

தொண்டமான் கோஷ்டியினர் இராஜலிங்கத்தை தலைவராக்குகின்றனர்

கொழும்பு, டிச. 17—

இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு குறித்து ஏற்கனவே செய்திகள் வெளிவந்திருந்தன.

இப்போது, காங்கிரசின் பொதுக் குழுவின் சிறப்புக் கூட்டம் ஒன்றில், இப்போதைய தலைவரான ஏ. அஜீஸ், மற்றும் துணைச் செயலாளர்களான கே. ஜி. எஸ். நாயர், எஸ் எம். சுப்பையா, மற்றும் இருவர் ஆகியோர் பதவிப் பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர்.

தொண்டமான் கோஷ்டியினர் கூட்டிய கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த முடிவு அஜீஸ் கோஷ்டியைச் சேர்ந்த ஐவரும் இன்னும் ஐந்தாண்டுகளுக்கு எந்த ஒரு பதவியும் வகிக்க இலாயக்கற்றவர்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இது அவர்கள், கடந்த கிழமையில் செயற்குழுவைக் கலைத்தும், அலுவலகத்திலிருந்த 'அலமாரி'யை உடைத்தும் நடந்துகொண்ட ஒழுங்கின்மைக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது.

இதற்கு முன்பாக, தலைவரான அஜீஸ் ஒரு அறிக்கையில், 'ஜனநாயகக் காங்கிரசில் பிளவு கூடாது' என்று குறிப்பிட்டிருந்தார்.

தொண்டமான் கோஷ்டியினர் இப்போது முன்னுள் காங்கிரஸ் தலைவரான இராஜலிங்கத்தைத் தலைவராக்கியிருக்கின்றனர்.

அஜீஸ் கோஷ்டியினர், தங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, முறை தவறியது என்றும், காங்கிரஸ் கட்சி பொது உறுப்பினர் மாநாட்டிலேயே இது குறித்து முடிவு மேற்கொள்ளப்பட முடியும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

12,000 பேர் பணியாற்றும் கங்கா பாலத் திட்டம்

ரூ.16 கோடி செலவில் வடநாட்டில் உருவாகிறது

இந்தியாவிலேயே 'உச்ச நிலை' சாதனையாம்!

'கங்கா பாலத் திட்டம்' இப்போது வெகு மும்முரமாக நடந்தேறி வருகிறது. பீகாரில், மொகாமே என்னுமிடத்தில் கட்டப்படுகிற இத்திட்டத்துக்கு ரூ. 16 கோடி செலவாகும். இப்பொழுது 12 000 தொழிலாளர்கள் 24 மணி நேரமும் தீவிரமாய் வேலை செய்து பால மேட்டையும், பக்கக் கரையையும் அமைத்து வருகிருர்கள். இந்த வேலை அடுத்த பருவமழைக்கு முன்னதாக முடிந்தாக வேண்டும்.

பால மேட்டுக்கு (அப்ரோச் பாங்) 400 இலட்சம் கன அடி மண் வேலை நடக்கவேண்டும்; பக்கக்கரைக்கு (கைட் பண்ட்) 250 இலட்சம் கற்கள் பதிக்கப்பட வேண்டும்; 300 இலட்சம் கன அடி மண் வேலையும் நடக்க வேண்டும். தினசரி 500 மீட்டர் கேஜ் வாகன் பாரமுள்ள 90,000 கன அடி கற்கள் ஆற்றைக் கடந்து பாலக்கரைப் பகுதியில் கொண்டு சேர்க்கப்படுகின்றன. இந்தியாவிலேயே இது எங்கும் நடந்திராத ஒரு உச்ச சாதனையாகும்.

இப்பெரிய வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வசதியாகத் தங்கியிருக்கும் பொருட்டு, வேலை நடக்குமிடத்திற்கு வெகு அருகில் சகல வசதிகளுடன் குடியிருப்பு ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது.

பொது வாக்காளர் பட்டியலிலிருந்து கலப்பு இனத்தவர் நீக்கம்

தெ. ஆ. சர்க்காரின் கெடுபிடி அதிகரிக்கிறது

தென்னப்பிரிக்காவில் பொதுவான தேசிய வாக்காளர் பட்டியலிலிருந்து கலப்பு சாதியினரை நீக்கி விடுவதற்கு, முதல் முறையாக ஸ்ட்ரீடம் சர்க்காருக்கு, மக்கள் சபையில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை கிடைக்கவிருப்பதாயும், இதற்காக எதிர்க் கட்சித் தலைவரான ஸ்ட்ராசுடன் பிரதமர் ஸ்ட்ரீடம் பேச்சுவார்த்தை நடத்தி முடித்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

இதனையொட்டி, இந்த ஆண்டைவிட வரும் ஆண்டில் தென்னப்பிரிக்காவில் தேசீயக் குழப்பமும், கிளர்ச்சியும் அதிகமாக இருக்கும் என்று மக்கள் சபையில் தேசீயக் கட்சி உறுப்பினரான ஓர்ஸ்டர் என்பார் குறிப்பிட்டிருக்கிருர்.

இந்திய இரயில்வேக்களுக்கு, வெள்ளச் சேதங்களினல், 1955 ஜூலை 1-ந் தேதியிலிருந்து இதுவரையில் மொத்தம் ரூ 78,43,848 நஷ்டமேற்பட்டுள்ளதாம். சேதம் அடைந்த பகுதிகளைச் சீர்செய்வதற்காக ரூ 97,58,848 செலவழிக்கப்பட்டிருக்கிறதாம்.

'பஞ்சாப் மொழிவழி மாநிலம் அமையாவிட்டால் அமைதி நிலவாது'

'சீக்கியர்-இந்துக்கள் நல்வாழ்வுக்கு ஆபத்து?'

மக்கள் சபையில் அகாலி தள உறுப்பினர் எச்சரிக்கை

"பஞ்சாபி மொழி வழங்கும் மக்களுக்கு தனி மாநிலம் தேவை என்ற கோரிக்கை முற்றிலும் நியாயமானதாகும்.

"பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம் இவற்றிற்காக மாநிலக் குழு செய்துள்ள சிபாரிசு, சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு மாருக, சிக்கல்களை மேலும் வளர்ப்பதாகவே இருக்கும்.

"மாநிலக் குழு சிபாரிசு செய்துள்ளபடி அமையும் மாநிலத்தில் வாழவேண்டிய 176 இலட்சம் மக்களில், 115 இலட்சம் மக்கள் அப்படி ஒரு மாநிலம் அமைவதை எதிர்க்கிருர்கள். அப்படியிருக்கும்போது, குழுவின் சிபாரிசு பஞ்சாபைப் பொறுத்து சரியானதல்லவென்று கூறிக்கொள்கிறேன்.

"1950-ம் ஆண்டில் குடியரசுத் தலைவர் பிறப்பித்த உத்தரவு ஒன்றில், 'இந்து மதத்தைப் பின்பற்றுகிற தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மட்டுமே பல சலுகைகள் கிடைக்கும்' என்று குறிப்பிட்டிருந்தார்; இந்த உத்தரவு முழுவதும் தவருனது என்று நாங்கள் கூறிவருகிறேம். அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாள்முதல்தான் இந்துக்கள்—சீக்கியர்களிடையே பிளவு தோன்றியது.

"நாங்கள் கூறுகிறேம்—பஞ்சாபில் வாழும் இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும் பண்பாடு ஒன்றுதான் என்று; ஆனல், இந்துக்கள் அதை ஏற்க மறுக்கின்றனர். தாங்கள் வேறு பண்பாடு கொண்டவர்கள் என்று கூறுகின்றனர். இப்படியிருக்க பிரிவினைக் கொள்கை கொண்டவர்கள் நாங்களா? இந்துக்களா?

"பஞ்சாபின் பிள்ளைகள்தான் இந்துக்களும்—சீக்கியர்களும்; அவர்களது தாய்மொழி பஞ்சாபி மொழிதான்; ஆனல் துரதிருஷ்டவசமாக இந்துக்கள், தங்கள் தாய்மொழி பஞ்சாபி என்பதை ஒப்ப மறுக்கிருர்கள்.

"பஞ்சாப் பிரதமர் சச்சார் கொள்கைப்படி பஞ்சாபி, இந்தி ஆகிய இரு மொழிகளும் வழங்கும் பகுதிகள் பஞ்சாபிலும், பெப்சுவிலும் மாவட்ட ரீதியில் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த இரு மாநிலங்களிலும் உள்ள பஞ்சாபி மொழி வழங்கும் பகுதிகளை ஒன்ருக இணைத்து, ஒரு மாநிலம் வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கிறேம். இதில் சுமார் 93 இலட்சம் மக்கள் வாழ்கிருர்கள். வளமும் ஏராளமாக உண்டு. இதில் சீக்கியர்கள் 56 சதவிகிதப் பெரும்பான்மை பெற்றிருப்பார்கள். எனவே, இந்த மொழிவழி மாநிலம் அமையவேண்டுவது இன்றியமையாதது.

"பஞ்சாபி மொழிவழி மாநிலம் அமையாவிட்டால் இந்தப் பகுதியில் அமைதி நிலவுவது சாத்தியம் என்று எதிர்பார்க்க முடியாது,"

—என்று, அகாலி தளத்தைச் சேர்ந்த சர்தார் ஹுகும் சிங், மக்கள் சபையில், 'பஞ்சாபி மொழிவழி மாநிலம் அமைக்க வேண்டும்,' என்ற கோரிக்கையை வலியுறுத்துகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

அவரது கருத்தை காங்கிரஸ்காரரான சர்தார் அஜீத், எதிர்பாராத விதமாக ஆதரித்துப் பேசியிருக்கிருர்.

1950-ல், குடியரசுத் தலைவர், சீக்கியர்களிடையேயும் — இந்துக்களிடையேயும் வேற்றுமை கற்பிக்கிற உத்தரவு பிறப்பித்ததையும் அவர் கண்டித்தார்.

சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கட்கு

21—12—55 புதன் கிழமை இரவு 9 மணிக்கு 13-வது வட்டம் கல்லாங்குத்து கிளையில் சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பல முக்கிய பொருள்கள் குறித்து ஆலோசிக்கப்படும்.

திருக்குறள் வகுப்பு

21—12—55 மாலை 6 மணிக்கு, சென்னை—புரசைபாக்கம், எண் 100, வேளாளர் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

22—12—55 மாலை 6 30 மணிக்கு, சென்னை 8-வது வட்ட முத்தமிழ்க் கழகப் பணிமனையில், (முத்தியாலுப்பேட்டை, எண் 10, லாயர் சின்னத்தம்பி முதலி தெரு) தோழர் மு. நடராசன் தலைமையில் நடைபெறும். 'உலகத்தில் நாம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்

ஆப்கனுக்கு ரஷ்யா வழங்கும் உதவி

10 கோடி டாலர் நீண்ட காலக் கடன்

மாஸ்கோ, டிச. 19—

சோவியத் ரஷ்யா ஆப்கனிஸ்தான் சர்க்காருக்கு நீண்ட காலக் கடனுக பத்துக் கோடி டாலர் (சுமார் ரூ. 47·6 கோடி) வழங்கும் என காபூலில் நேற்று வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், சோவியத் சர்க்கார், ஆப்கனுக்கு தொழில் நுணுக்க உதவியும் வழங்கும் என்றும் கூட்டறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

இரண்டு நாடுகளிடையேயும் பரஸ்பரம் நலம் புரியும் அடிப்படையில், நாளுக்கு நாள் விரிவாகி வரும் வர்த்தக, பொருளாதாரத் தொடர்புகள் திருப்தியளிக்கின்றன என்றும் அறிக்கை கூறிற்று.

இரண்டு நாடுகளின் நலன்களையும் உத்தேசித்து இந்தத் தொடர்புகள் மேலும் உறுதிப்பட வேண்டுமென இரு சாராரும் கருதுகின்றனர்.

அன்பளிப்பு

காபூல், டிச. 19—

காபூலுக்கு 15 பஸ்களும், 100 - படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றும் அன்பளிப்பாக வழங்குவதாக சோவியத் பிரதமர் புல்கானின் இன்று அறிவித்தார்.

ஒப்பந்தம்

ரஷ்யாவுக்கும் — ஆப்கனிஸ்தானத்திற்குமிடையே உள்ள அரசியல், பொருளாதார, கலாச்சாரத் தொடர்புகளைப் பரவலாக்குவதென இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ள கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1931 ஜூலை 24-ந் தேதி கையெழுத்தான நடுநிலைமை, அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்தை மேலும் 10 ஆண்டுகளுக்கு இரு நாடுகளும் நீடித்துக்கொண்டு உடன்படிக்கை செய்துகொண்டுள்ளன. இந்த உடன்படிக்கையை ரத்து செய்வதானல் 6 மாத முன்னறிவிப்பு கொடுக்கவேண்டும்.

சூடான் குடியரசாகும்

கார்டூம், டிச. 19—

"சூடான் ஒரு சுதந்திரக் குடியரசாகத் திகழவேண்டும்,"

என்று, சூடான் மக்கள் சபை ஒருமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது

தாமதமின்றி, சூடான் குடியரசை ஏற்றுக்கொள்ளுமாறு, சூடான் சர்க்காருடன் நல்லுறவு வைத்துக் கொள்ள விரும்பும் எல்லா நாட்டு சர்க்கார்களையும் சூடான் பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

குடி உரிமை மனுக்கள் ஏற்கப்படும் விந்தை!

இலங்கை-இந்தியா ஒப்பந்தம் அமுலாகும் இலட்சணம்

கொழும்பு, டிச. 19—

இலங்கைக் குடி உரிமைக் கோரி கடந்த அக்டோபர் மாதம் இலங்கை இந்தியர்கள் செய்துகொண்ட மனுக்களில் 7 சதவிகிதம் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம்; மற்றவைகள் நிராகரிக்கப்பட்டிருக்கிறதாம்

3,169 மனுக்களில் 982 பேர் சம்பந்தப்பட்ட 221 மனுக்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டன; மீதி 8 952 பேர் சம்பந்தப்பட்ட 2,948 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இத்துடன், இதுவரையில் மொத்தம் 36,781 பேர் இலங்கைக் குடி உரிமை பெற்றுள்ளனர். 1,79,216 பேருடைய மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் மனுச் செய்துகொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 8 இலட்சமாகும்.

எஸ். ஆர். எம். யூ. உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள்

"தென்பகுதி இரயில்வேமென் யூனியனின் (எஸ்.ஆர்.எம்.யூ.) பொதுச்செயலாளர் என்று சொல்லிக்கொண்டு, ஏ. கே. சச்சிதானந்தம் என்ற ஒருவரின் பெயரில், 'தென்பகுதி இரயில்வேமென் யூனியன் பொதுச்சபை (General Body) கூட்டம் 25-12-55 அன்று பொன்மலையில் கூடும்' என ஒரு அறிக்கை, ஒரு தின இதழில் வந்திருக்கிறது.

"தோழர் சச்சிதானந்தம் என்பவர், யூனியனிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு விலக்கப்பட்டவர் என்பதும், அவர் எந்தப் பொறுப்பும் வகிக்கவில்லை என்பதும் யாவரும் அறிந்ததே. எனவே, பொன்மலையில் கூடுவதாக அறிவிக்கப்பட்டுள்ள அந்தக் கூட்டம், யூனியனின் அதிகாரபூர்வமானது அல்ல என்பதோடு, அதன் நடவடிக்கைகள் யூனியனைக் கட்டுப்படுத்தாது என்றும் அறிவிக்கப்படுகிறது. இத்தகைய அறிக்கைகளைக் கண்டு ஏமாற்றமுருமல் இருக்கும்படி, இரயில்வேத் தொழிலாளர்களையும், குறிப்பாக 'யூனியன்' உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேம்,"

என்று, தலைவர் சி. இராகவானந்தம் அவர்களும், கூட்டுப் பொதுச் செயலாளர் பொன். பரமசிவம் அவர்களும் அறிவிக்கிருர்கள்.

தோழர் கருணாநிதி விளக்கம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

பட்டது; பின்னர் 1928-ம் ஆண்டில்தான் முதல் போராட்டத்தில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்

"அப்போது முகுந்தலால் சர்க்கார், கிருஷ்ணசாமி பிள்ளை, எஸ். வி. லிங்கம் போன்றவர்கள் அந்தப் போராட்டத்தில் முன்னின்று பாடுபட்டுவந்தனர். அந்தப் போராட்டத்திற்கு முழு ஆதரவு காட்டியவர்கள் இன்றைய திராவிடர் இயக்கத்திலிருப்பவர்கள் எல்லோரும்தான்.

"பெரியார் அதுபோது, தன் நிர்வாகத்தில் நடத்திக்கொண்டிருந்த 'திராவிடன்' இதழ் மட்டும்தான் தொழிலாளரின் நலனுக்காகக் குரல் எழுப்பிவந்தது இரயில்வேத் தொழிலாளர் போராட்டம் பற்றி மட்டும் 18 தலையங்கங்கள் எழுதிற்று 'திராவிடன்' இதழ்.

"இப்படி அதைத் தொடர்ந்து இன்று திராவிடரியக்கத்தில் முன்னேடிகளாயிருப்பவர்கள் எல்லாம் தொழிலாளர் நலனுக்குத் தங்களாலானவரை பாடுபட்டு வந்திருப்பவர்கள்—தொடர்ந்து பாடுபடுபவர்கள்.

"எனவே, இன்று 'எஸ். ஆர். எம். யூ' என்ற இரயில்வேத் தொழிலாளர் சங்கத்தவர், தி. மு. கழகத்தின் தோழமையை நாடியிருப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல.

"இன்றைய நிலையில், 'தொழிலாளர்களுக்கு வயிறு ஒன்றுதான் உண்டு' என்று, கம்யூனிஸ்டுக் கட்சியினர் கருதுகின்றனர்; 'தொழிலாளர்களுக்குக் கை ஒன்றுதான் உண்டு—அதுதான் இருக்க வேண்டும், ஓட்டு போடுவதற்கு,' என்று, காங்கிரசார் கருதுகின்றனர்; ஆனல், தி. மு. கழகம் கருதுகிறது—'தொழிலாளர்களுக்கு வயிறும் இருக்கிறது; கையும் இருக்கிறது; 'இதயம்' என்ற ஒன்றும் இருக்கிறது'—என்று!

"தொழிலாளர்களுக்கு இதயம், இருப்பதாகத் தி மு. கழகம் கருதுவதால்தான், இதர கட்சிகளிலிருந்து வேறுபட்டதாக விளங்குகிறது.

"தொழிலாளர்கள் பொருளாதாரத் துறையில், அரசியல் துறையில் வெற்றிகள் பெறுவது மட்டும் போதுமானதல்ல; சமுதாயத் துறையில் நல்ல முன்னேற்றம் பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்று தி. மு. கழகம் கருதுகிறது,"

—என்று, சென்னை கோகலே மண்டபத்தில், 17—12—55 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார்.

கூட்டம் எஸ். ஆர். எம். யூ. சென்னைக் கிளையின் நிதிக்காக நடைபெற்றது. நன்கொடையாக ரூபாய் ஒன்று, அணா எட்டு செலுத்தி. தொழிலாளத் தோழர்களும், பொது மக்களும் ஆண்களும் - பெண்களுமாக வந்திருந்தனர்.

கூட்டத்திற்கு தோழர் டி. நல்லப்பன் தலைமை தாங்கினர்.

தோழர்கள் ரங்கமன்னர், முருகவேல், துரைராஜ் ஆகிய தொழிலாளத் தோழர்கள் பேசினர்.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி, இரயில்வேத் தொழிலாளர் நிலை குறித்தும், கடந்த காலத்தில் அவர்கள் நடத்திய போராட்டங்களை குறித்தும், திராவிடர் இயக்கத்திற்கு அவர்களுடன் உள்ள தொடர்பு குறித்தும், இதர தொழிற் சங்கங்களின் போக்கு குறித்தும் விரிவாகப் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

பாக்.-ஆப்கன் தகராறு

அமெரிக்க தலைவர் சிபாரிசு?

கராச்சி, டிச. 19—

ஆப்கனிஸ்தான் — பாகிஸ்தான் தகராறில் மத்தியஸ்தம் செய்து வைக்கும்படி அமெரிக்கத் தலைவர் ஐசனேவரை ஆப்கன் மன்னர் கேட்டுக்கொண்டாராம்!

இவ்வாறு கூறியுள்ள பாக். வானெலி, இரு நாடுகளிடையே ஏற்பட்டுள்ள தகராறைத் தீர்ப்பதற்கு, பாக். கவர்னர்-ஜெனரலுடன் ஆப்கன் மன்னர் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென அவருக்கு, அமெரிக்கத் தலைவர் ஐசனேவர் சிபாரிசு செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறதாம்.

தென்னுட்டில் அணுசக்தி தாதுக்கள்

நெல்லை, இராமநாதபுரத்தில் கதிரியக்கப் படிவங்கள்

அணு இலாகா நிபுணர்கள் பரிசீலனை செய்கின்றனர்

திருவனந்தபுரம், டிச 19—

அணுசக்தி ரேடியக் கதிரியக்கப் படிவங்களை (யுரேனியம், தோரியம்) கண்டுபிடிப்பதற்காக அணுசக்தி இலாகாவைச் சேர்ந்த பூகர்ப்ப நிபுணர்கள் குழு, திருவாங்கூர் - கொச்சி கடலோரங்களில் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்தக் குழுவைச் சேர்ந்த இருவர் மலபார் மாவட்டத்திலுள்ள வைநாட்டிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருவரும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருவரும், கொச்சி பிரதேசத்தில் ஒருவரும் இருக்கிருர்கள்.

திருவாங்கூர்-கொச்சி, சென்னை மாநிலக் கடற்கரையோரங்களில் பரிசீலனை செய்யும் இந்தக் குழுவின் உறுப்பினர்கள் 1951-ல 4 பேர்களாக இருந்தனர்; தற்போது 12 பேர்களாக உயர்த்தப்பட்டிருக்கின்றனர்.

---

2 மாத போனஸ்

பெங்களூர், டிச. 19—

மைசூர் சர்க்கார் மோட்டார் போக்கு-வரத்து இலாகா ஊழியர்களுக்கு இரண்டு மாத சம்பளத்தை போனசாக அளிப்பதற்கு; மைசூர் சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்,

---

கொள்ளையன் தந்த......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மான்சிங் இரக்கம் காட்டுவது வழக்கமாம்.

இந்த அதிர்ச்சியிலிருந்து அவர் தெளிவதற்குள்ளாக மான்சிங் அவருக்கு ரூ 21 காணிக்கையாகத் தந்து உலக சுற்றுப் பயணத்தை தொடரும்படி கூறினும்.

இந்தச் சம்பவத்தைப் பற்றி அவர் வக்கீல்கள் சங்கத்தில் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன். எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ